# மணப்பாறை நகராட்சி

**2018 – ஆம் ஆண்டு ஜீலை மாதம் ( 23.07.2018) 23 –ஆம் தேதி திங்கட்கிழமை காலை 11.00 மணிக்கு நகர்மன்ற அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.**

| மன்ற கூட்டம் நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப் பொருள் | தீர்மானம் |
|---|---|---|
| 23.07.2018 | **பொருள் – 1**<br>மணப்பாறை நகராட்சியில் 1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலமாக குடிநீர் திட்டம் செயல்படுத்தப்பட்டு 8 மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகள் மூலமாக 15 குடிநீர் விநியோக மண்டலஙகளாக பிரிக்கப்பட்டு தினசரி 2.00 MLD சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் பொது மக்களுக்கு 49 LPCD என்ற அடிப்படையில் வழஙகப்பட்டு வருகிறது. மேலும், இந்நகராட்சியில், மொத்தமுள்ள 11621 குடியிருப்புகளில் 7370 குடிநீர் இணைப்புகள் வழஙகப்பட்டுள்ளது. மீதமுள்ள 2080 குடியிருப்புகளுக்கு புதியதாக குடிநீர் இணைப்புகள் வழஙகும் பணிக்காக TUFIDCO மூலம் வட்டியில்லா கடனாக ரூ. 100.00 லட்சத்திற்கு பணி மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது.<br>மேலும், 29.06.2018 அன்று நடைபெற்ற ஆய்வுக் கூட்ட நடவடிக்கையில் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்கள் அறிவுறுத்தியதற்கிணஙக அனைத்து பகுதிகளுக்கும் தினமும் சீரான குடிநீர் வழஙக ஏதுவாக தற்போதுள்ள குடிநீர் வினியோக முறையை (Distribution System) சரிசெய்து அனைத்து பகுதிகளுக்கும் ஒரே மாதிரியான குடிநீர் அழுத்தத்துடன் கூடிய வினியோக முறையாக (District Metering Area) மாற்றி அமைக்க கலந்தாலோசகர் நியமித்து விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யவும், மேலும் இதற்கான செலவினத்தை Project Development Grant Fund (PDGF) அல்லது Project Preparatory Fund (PPF) நிதியின் கீழ் மேற்கொள்ளவும் தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு : –** மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(கோப்பு எண். 1149 /2018/இ1) | **தீர்மான எண். 387 அனுமதிக்கப்பட்டது.** |
| 23.07.2018 | **பொருள் – 2**<br>மணப்பாறை நகராட்சி தனி அலுவலர் மற்றும் ஆணையர்(பொ) அவர்களின் 01.06.2018 ம் தேதிய நகர்மன்ற தீர்மானம் எண்.376–ல், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 124–D உட்பிரிவு | **தீர்மான எண். 388 அனுமதிக்கப்பட்டது.** |

13–ன்படியும், தமிழ்நாடு அரசாணை (நிலை) எண்.11 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.12.01.1999–ன் படியும், தொழில்வரி விகிதங்களை 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை சீராய்வு மேற்கொள்ள ஆணையிடப்பட்டுள்ளது. இந்நகராட்சியில் வசூல் செய்யப்பட்டு வரும் தொழில்வரி விகிதங்களை 25% க்கு குறையாமலும் 35% க்கு மிகாமலும் மற்றும் அரையாண்டிற்கு தொழில்வரி அதிகபட்சமாக ரூ.1250/–க்கு மிகாமலும் உயர்வு செய்து 2018–19 II–ம் அரையாண்டு முதல் நிர்ணயம் செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதன்படி தற்பொழுது கீழ்க்கண்ட அட்டவணையின்படி அரையாண்டிற்கு தொழில்வரி வசூலிக்கப்பட்டு வருவதில் ஒவ்வொரு சராசரி அரையாண்டு வருமான நிலைகளில் தொழில்வரியினை 35% உயர்வு செய்திடவும் அரையாண்டிற்கு ரூ.1250/–க்கு மிகாமலும் 2018–19 II–ம் அரையாண்டு முதல் கீழ்க்குறிப்பிட்டுள்ள விவரப்படி வசூல் செய்ய மன்றம் ஒப்புதல் அளித்துள்ளது.

| வ. எண் | சராசரி அரையாண்டு வருமானம் | தற்போது அமலில் உள்ள அரையாண்டிற்கான தொழில்வரி (ரூ) | 35% உயர்வு செய்யப்பட்ட தொழில்வரி (ரூ) | 01.10.2018க்கு பின் நிர்ணயம் செய்யப்படும் அரையாண்டு தொழில்வரி (ரூ) |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | ரூ.21,000/– வரை பெறுவோர் | இல்லை | இல்லை | இல்லை |
| 2 | ரூ.21,001/– முதல் 30,000/– வரை | 132 | 46 | 178 |
| 3 | ரூ.30,001/– முதல் 45,000/– வரை | 329 | 115 | 444 |
| 4 | ரூ.45,001/– முதல் 60,000/– வரை | 659 | 231 | 890 |
| 5 | ரூ.60,001/– முதல் 75,000/– வரை | 987 | 345 | 1250 |
| 6 | ரூ.75,001/– முதல் அதற்கு மேல் | 1250 | – | 1250 |

மேற்குறிப்பிட்ட தொழில்வரி உயர்வு தொகைகள் தெரிவித்து, இதன் மீது தினமணி நாளிதழில் 23.06.2018ம் தேதியில் 30 நட்களுக்குள் ஆட்சேபணை கோரி அறிவிப்பு செய்யப்பட்டது. 30 நாட்கள் காலக்கெடுவிற்குள் ஆட்சேபணைகள் ஏதும் இவ்வலுவகத்திற்கு வரப்பெறவில்லை. எனவே மேற்கண்ட தொழில்வரி உயர்வு விகிதத்தை 2018–19 இரண்டாம் அரையாண்டு முதல் நடைமுறைபடுத்தியும், அறிவிப்பை மாவட்ட அரசிதழில் விளம்பரம் செய்யவும், அதற்காகும் செலவுத் தொகைக்கு மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

| | | |
|---|---|---|
| 23.07.2018 | **பொருள் – 3**<br>தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 124–D உட்பிரிவு 13–ன்படியும், தமிழ்நாடு அரசாணை (நிலை) எண்.11 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் துறை, நாள்.12.01.1999–ன் படியும், தொழில்வரி விகிதஙகளை 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை சீராய்வு மேற்கொள்ள ஆணையிடப்பட்டுள்ளது. அதனடிப்படையில் மணப்பாறை நகர்மன்ற தீர்மானம் எண்.376 நாள். 01.06.2018–ன்படி இந்நகராட்சியில் வசூல் செய்யப்பட்டு வரும் தொழில்வரி விகிதங்களை 25% க்கு குறையாமலும் 35% க்கு மிகாமலும் மற்றும் அரையாண்டிற்கு தொழில்வரி அதிகபட்சமாக ரூ.1250/–க்கு மிகாமலும் உயர்வு செய்து 2018–19 II–ம் அரையாண்டு முதல் நிர்ணயம் செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கான விளம்பரத்தை திருச்சி மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் மூலம் 23.06.2018 அன்று தினமணி நாளிதழில் பிரசுரம் செய்யப்பட்டதில் Bright Advertising நிறுவனத்திற்கு விளம்பரக் கட்டணத் தொகை ரூ.8716/– ஐ செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. செலவினத் தொகையை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.<br>ந.க.எண்.1227/2018/அ1 | **தீர்மான எண். 389**<br>**அனுமதிக்கப்பட்டது.** |
| 23.07.2018 | **பொருள் – 4**<br>திருமதி. V.S.C தனலெட்சுமி, திரு.V.பழனியப்பன், திருமதி.S.பத்மா என்பவர்களால் மணப்பாறை முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு O.S.No.161/2018. I.A.No.367/2018 –ல் சொத்துவரி தொடர்பாக "நகராட்சி ஆணையர் " அவர்களை பிரதிவாதியாக சேர்க்கப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் நகராட்சி சார்பாக இந்நகராட்சி நிலை வழக்கறிஞர் திரு.க.பழனிக்குமார் அவர்கள் ஆஜராவதற்கும் மற்றும் அதற்கான வழக்கு செலவினங்களுக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம் | **தீர்மான எண். 390**<br>**அனுமதிக்கப்பட்டது.** |
| 23.07.2018 | **பொருள் – 5**<br>திரு.முகமது உசேன் என்பவரால் திருச்சிராப்பள்ளி மாவட்ட நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு I.A No.16/2018, A.S.S.R.No.2063 - ல் சொத்துவரி தொடர்பாக "நகராட்சி ஆணையர் " அவர்களை பிரதிவாதியாக சேர்க்கப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் நகராட்சி சார்பாக, இந்நகராட்சி நிலை வழக்கறிஞர் திரு.க.பழனிக்குமார் அவர்கள் ஆஜராவதற்கும் மற்றும் அதற்கான வழக்கு செலவினங்களுக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம் | **தீர்மான எண். 391**<br>**அனுமதிக்கப்பட்டது.** |

| | | |
|---|---|---|
| 23.07.2018 | **பொருள் – 6**<br>2016–2017 –ம் ஆண்டிற்கு மணப்பாறை நகராட்சிக்கு தணிக்கை மேற்கொண்டமைக்கு தணிக்கை கட்டணம் ரூ.58,210/– (ரூபாய் ஐம்பத்தி எட்டாயிரத்தி இரநூற்றி பத்து ரூபாய் மட்டும் ) செலுத்த கோரி வந்துள்ள உதவி இயக்குநர் உள்ளாட்சி நிதித் தணிக்கை, திருச்சிராப்பள்ளி அவர்களின் கடித ந.க.எண்.அ/11/2018 நாள்.05.11.2018–ன் படி அரசு தலைப்பில் செலுத்திட மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. செலவினத் தொகையை வருவாய் நிதியில் மேற்கொள்ளலாம்.<br>( ந.க.எண்.4468/2002/பி3) | **தீர்மான எண். 392**<br>**அனுமதிக்கப்பட்டது.** |
| 23.07.2018 | **பொருள் – 7**<br>நகர்மன்ற தீர்மான எண்.329 நாள்.28.03.2018 அலுவலக உபயோகத்திற்கு எழுது பொருட்கள் 2017–18 நிதியாண்டில் கொள்முதல் செய்ய ஆகும் உத்தேச செலவில் ரூ.10.00 இலட்சத்திற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அவசர அவசியம் கருதி அலுவலகதிற்கு தேவையான எழுது பொருட்களை தேவைக்கு ஏற்றாற்போல் அரசு அங்கீகாரம் பெற்ற கூட்டுறவு நிறுவனத்திடம் இருந்து வாங்கிக்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு</u>**<br>1. அனுமதிக்கலாம்.<br>செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம். | **தீர்மான எண். 393**<br>**அனுமதிக்கப்பட்டது.** |
| 23.07.2018 | **பொருள் – 8**<br>திரு.கே.இளங்கோ, த.பெ.கந்தன், மொண்டிபட்டி, மணப்பாறை என்பவரின் விண்ணப்பம் நாள்.20.07.2018 ன்படி இந்நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையத்தில் பெண்கள் கட்டண கழிப்பிடத்தில் கட்டணம் வசூல் செய்து கொள்ளும் உரிமத்தினை குடும்ப சூழ்நிலை காரணமாக தொடர்ந்து நடத்த இயலவில்லையெனவும், குத்தகை உரிமத்தினை திரும்ப ஒப்படைப்பு செய்வதாகவும், முன்வைப்புத் தொகையினை திரும்ப வழங்க கோரி 20.07.2018 தேதியில் விண்ணப்பம் செய்துள்ளார். ஆனால் சாவி மற்றும் குத்தகை ஒப்படைப்பு செய்யப்பட்ட போது ஒப்படைத்த பொருட்கள் ஆகியவற்றை ஒப்படைப்பு செய்யப்படவில்லை.<br>மேற்கண்ட ஆண்டு குத்தகையினம் 2017–2020 வரை மூன்றாண்டு குத்தகை தொகுப்பாகும். தற்போது இரண்டாம் குத்தகை 2018–2019 ம் நிதியாண்டிற்கு (07.06.2018 முதல் 06.06.2019 வரை) குத்தகையினை அனுபவித்து கொள்ள முதலாம் ஆண்டு குத்தகை தொகையில் 5 சதவீத உயர்வு செய்த தொகை ரூ.7,30,286/– (வரிகள் உட்பட) முன்கூட்டியே பெறப்பட்டு விட்டது.<br>எனவே குத்தகைதாரரின் கடிதத்தின் அடிப்படையில் மறு ஏலம் கோரும் பட்சத்தில், ஏலம்/ஒப்பந்தப்புள்ளி | **தீர்மான எண். 394**<br>**அனுமதிக்கப்பட்டது.** |

| | | |
|---|---|---|
| | கோரி ஒப்படைப்பு செய்யப்படும் காலம் வரை குத்தகைத் தொகையினை ஈடுசெய்வதுடன், மறு ஒப்பந்தப்புள்ளி கோரும் பட்சத்தில் ஏற்படும் நிதியிழப்பிற்கு குத்தகை விதிகளின்படி குத்தகைதாரரே பொறுப்பாவார் என்ற நிபந்தனையுடனும் மறு ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோர மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம். | |
| 23.07.2018 | **பொருள் – 9**<br>மணப்பாறை நகராட்சிக்குட்பட்ட பார்க்ரோடு அருகில் மணப்பாறை நகராட்சிக்கு சொந்தமான ஆடு அடிக்கும் இடத்திற்கு முன்புறம் கடைகள் கட்டும் பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.9.90 லட்சத்திற்கும் பணியினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொண்டதற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு</u>**<br>அனுமதிக்கலாம். | **தீர்மான எண். 395**<br>**<u>அனுமதிக்கப்பட்டது.</u>** |
| 23.07.2018 | **பொருள் – 10**<br>திரு.எல்.பிரபாகரன், 13/13, திருச்சி ரோடு, எ.பூசாரிபட்டி, ஆண்டவர் கோவில் அஞ்சல், மணப்பாறை என்பவரின் விண்ணப்பம் நாள். 31.01.2018 மற்றும் 13.02.2018ன்படி கீழ்க்கண்டவாறு விபரம் தெரிவித்துள்ளார்.<br>1. கோவில்பட்டி சாலை வணிக வளாக முதல் தளம் கடை எண். 2<br>2. கோவில்பட்டி சாலை வணிக வளாக முதல் தளம் கடை எண்.3<br>3. நாளங்காடி நுழைவு வாயில் புதிய கடை எண்.2<br>4. நாளங்காடி நுழைவு வாயில் புதிய கடை எண்.3<br>திரு.எல்.பிரபாகரன், குத்தகைதாரர் தொழிலில் ஏற்பட்ட நஷ்டத்தாலும், வாடகை தொகை அதிகப்படியாக உள்ளதெனவும் மேற்கண்ட கடையினை நகராட்சி விதிகளின்படி 90 நாட்களுக்கு முன் ஒப்படைப்பு செய்வதாக கடிதம் கொடுத்துள்ளார். ஆனால் ஆவணங்களாக சாவி மற்றும் ஒப்படைப்பு செய்யப்பட்ட போது ஒப்படைத்த பொருட்கள் ஆகியவற்றை ஒப்படைப்பு செய்யப்படவில்லை.<br>குத்தகைதாரரின் கடித்தின் அடிப்படையில் மறு ஏலம் கோரும் பட்சத்தில், ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரி ஒப்படைப்பு செய்யப்படும் காலம் வரை மற்றும் வாடகை செலுத்த வேண்டும் என்ற நிபந்தணையுடனும், மறு ஒப்பந்தப்புள்ளி கோரும் பட்சத்தில் ஏற்படும் நிதியிழப்பிற்கு குத்தகை விதிகளின்படி குத்தகைதாரரே பொறுப்பாவார் என்ற நிபந்தனையுடனும் மறு ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோர மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம். | **தீர்மான எண். 396**<br>**<u>அனுமதிக்கப்பட்டது.</u>** |

| | | |
|---|---|---|
| 23.07.2018 | **பொருள் – 11**<br>இந்நகராட்சியின் **2017–18** ம் ஆண்டுக்கான வருவாய் நிதி கணக்கு , குடிநீர் வடிகால் நிதி கணக்கு, கல்வி நிதிக்கணக்கு தயார் செய்து தணிக்கைக்கு சமர்ப்பிக்கும் பொருட்டு மேற்கண்ட பணியை திரு.மதன்குமார் TACT Computer Accounting Software மூலம் பணி மேற்கொள்ளவும், உத்தேச செலவினத் தொகை ரூ.**40,000/–**க்கும் செலவினத் தொகையை பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு</u>**<br>அனுமதிக்கலாம். | **தீர்மான எண். 397**<br>**அனுமதிக்கப்பட்டது.** |
| 23.07.2018 | **பொருள் – 12**<br>இந்நகராட்சியில் ஒப்பந்ததாரர்கள், பணியாளர்களுக்கு பிடித்தம் செய்யப்பட்ட வருமான வரித் தொகையினை சம்மந்தப்பட்ட அரசுத்தலைப்பில் செலுத்தப்பட்டுள்ளதை E-TDS செய்யும் பணியையும் இந்நகாட்சிக்கு GST பதிவு செய்து பதிவு எண் பெற்றதற்கான செலவு தெகை ரூ.**18,000/–** ஐ தணிக்கையாளருக்கு வழங்கவும், செலவின தொகையை பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம் | **தீர்மான எண். 398**<br>**அனுமதிக்கப்பட்டது.** |
| 23.07.2018 | **பொருள் – 13**<br>மணப்பாறை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் பட்டியல் புதுகை வரலாறு (PUDUGAI VARALARU ) நாளிதழில் பிரசுரம் செய்தமைக்கான கட்டணம் ரூ.**16024/–**ஐ PUDUGAI VARALARU நாளிதழுக்கு வழங்கவும் இதனை பொது நிதியில் இருந்து வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு</u>**<br>அனுமதிக்கலாம். | **தீர்மான எண். 399**<br>**அனுமதிக்கப்பட்டது.** |
| 23.07.2018 | **பொருள் – 14**<br>புரட்சித்தலைவர் MGR சத்துணவு திட்டத்தில் மணப்பாறை நகராட்சி கட்டுப்பாட்டில் இயங்கும் நான்கு பள்ளிகளுக்கும் MP-MDMS - MME திட்டத்தில் **2014–2015** ம் ஆண்டிற்கு நெகிழ்வு அட்டை (ப்ளக்ஸ் போர்டு) நிறுவனத்திற்கு அரசு ஆணை (டி), எண்.44 சமூகநலம் (ம) சத்துணவு திட்டத்துறை(ச.மு.4–1) துறை நாள் **21.03.2015**ன் படி **24.04.2017**ல் விலைப்புள்ளி கோரப்பட்டது. இதில் கீழ்க்கண்ட நான்கு விலைப்புள்ளி வரப்பெற்றன.<br><br>**1.** Sri Renugambal Traders, No.1456 Post Office Street, A.K. Padavedu, Polur(T.K), T.V.Malai (Dt) - 606905. — Rs.2000/- | **தீர்மான எண். 400**<br>**அனுமதிக்கப்பட்டது.** |

| | | |
|---|---|---|
| 2. | Mega & Co.<br>No.27 Salvanpet,<br>Anthoniyar Kovil Street, vellore,<br>Vellore (Dt)- 632001 | Rs.2600/- |
| 3. | King Steels,<br>No.71 , Perumal Kovil Street,<br>Ariyalur, Thirukkai,<br>Viluppuram (Dt). | Rs.2500/- |
| 4. | Sri Renugambal Traders,<br>No.1456 Post Office Street,<br>A.K. Padavedu, Polur(T.K),<br>T.V.Malai (Dt) - 606905. | Rs.1950/- |

மேற்கண்ட நிறுவனங்களில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்து வேலை முடித்துள்ள நிறுவனம் Sri Renugambal Traders, என்பவருக்கு ரூ.7800/– தொகை வழங்க மன்றப்பொருள் ஒப்புதலுக்கு.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

குறைந்த விலைப்புள்ளி ஏற்கப்பட்டு அவசர அவசியம் கருதி முடிக்கப்பட்டது. ஆகவே ரூ.7800/– வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**தனி அலுவலர்**
**மணப்பாறை நகராட்சி**